# பொள்ளாச்சி நகராட்சி
## 08.02.2018 அன்று நடைபெற்ற நகர மன்ற அவசரக் கூட்ட தீர்மானங்கள்

747 பொள்ளாச்சி நகராட்சி பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/தேபொ1, நாள்.19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி வரைவு மறுவரையறை கருத்துக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியன தயார் செய்யப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்.654, நாள்.13.12.2017ல் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு 27.12.2017 தேதியிலிருந்து பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக கடந்த 12.01.2018ம் தேதி வரை ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொது மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 45 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான மண்டல வாரியான ஆய்வுக்கூட்டம் கோவையில் 01.02.2018 அன்று நடைபெற்றது. மேற்கண்ட ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததன் அடிப்படையில் மேலும் இரு மனுக்கள் வரப்பெற்றது. பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் 9 கோரிக்கைகள் மட்டும் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 4 கோரிக்கைகள் பகுதி ஏற்கப்பட்டு, பகுதி நிராகரிக்கப்பட்டது. பிற கோரிக்கைகள் அனைத்தும் வார்டு மறுவரையறை விதிகளுக்குட்படாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் தற்போது மாற்றியமைக்கப்பட்ட உத்தேசங்களை உறுப்பினர் செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள்.31.01.2018ம் தேதிய கடிதத்தின்படி, உரிய வழிகாட்டுதலின்படி தயார் செய்யப்பட்டுள்ளது. பொள்ளாச்சி நகராட்சியின் 36 வார்டுகளுக்கான இறுதி வரைவு மறுவரையறை கருத்துக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு, மாநில மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 5571/2017/ஜி1**

748 பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குள் கோவை – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை எண்.83ல் காந்தி சிலை முதல் வி.கே.ஆர்.வீதி சந்திப்பு வரை சாலையின் மேற்கு புறத்தில் குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாததால் அங்கு பகிர்மானக்குழாய்கள் அமைக்க ரூ.4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற பொருள் வைக்கப்பட்டது. இப்பணி குடிநீர் விநியோகப்பணி என்பதால் அவசர அவசியம் கருதி விரைவில் பணி முடிக்க, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் படி 15ன் கீழ் 22.01.2018ல் அனுமதித்து, ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன் படி 30.01.2018ல் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.சுப்பிரமணியம், பொள்ளாச்சி | விலைப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட 2.46%அதிகம் |
| 2. | M/s.கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸஸ், கோவை | விலைப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட 1.12% குறைவு |
| 3. | M/s தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி | விலைப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட 3.06 %அதிகம் |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/s.கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸஸ், கோவை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை ஆணை வழங்கி பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

749 பொள்ளாச்சி நகராட்சியின் பொறியியல் பிரிவின் செயல்பாட்டிற்காக இயங்கும் வாகனங்களின் வருட காப்பீடு (Insuance) பெற செலுத்தும் ஓராண்டிற்கான கட்டணத்தொகைகளுக்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

750 பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜோதி நகரில் புதிதாக பூங்கா அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.15040/2017/இ1 நாள். 28.12.2017 கடித நகலில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.100.00 இலட்சம் முழுமானிய தொகை வழங்கி நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற கடித நகலை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.